# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டம்

---

*(2000 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 09 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

2000, ஒகத்து மாதம் 11 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 01, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 3.50**

## 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டம்

[2000 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ. 42/99

**இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

**1.** இச்சட்டம் 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I

### இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம்

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையத்தைத் தாபித்தல்.

**2.** (1) இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம் என அழைக்கப்படவேண்டியதான நிலையமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் (இது இதனகத்துப்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.).

(2) நிலையமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு, இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் வழக்குத்தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

(3) நிலையத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் இருத்தல் வேண்டும். நிலையத்தின் முகாமைச்சபையானது, இலங்கையினுள் கொழும்புக்கு வெளியே உள்ள இடங்களில் சபை அவசியம் எனக் கருதக்கூடியவாறான நிலையத்தின் அத்தகைய கிளை அலுவலகங்களைத் தாபிக்கலாம்.

2 — H 008016 — 700 (2000/06)

நிலையத்தின் பணிகள்.

3. நிலையத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் —

(அ) வர்த்தகப் பிணக்குகளைத் தீர்மானித்தல் மற்றும் தீர்வுகாணல் என்பவற்றுக்காக மத்தியஸ்தத்தையும் இணக்கத்தையும் பரந்தளவில் ஏற்றுக்கொள்ளுதலை மேம்படுத்துதல் ;

(ஆ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கம் என்பவற்றின் மூலம் வர்த்தகப் பிணக்குகளைத் தீர்மானிக்குமாறு திறத்தவர்களை ஊக்குவித்தல் ;

(இ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கம் என்பவற்றின் மூலம் —

(i) வர்த்தகப் பிணக்குகளுக்குத் தீர்வுகாண்பதற்காக,

(ii) வர்த்தக விடயங்களில் திறத்தவர்களுக்கு இடையே எழுகின்ற வேறுபாடுகளைச் சரிசெய்வதற்காக,

வழக்கு நடவடிக்கைகளை நடாத்துதலும் அத்துடன் நடாத்த வசதி செய்வித்தலும்.

நிலையத்தின் தத்துவங்கள்.

4. நிலையம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் —

(அ) அசையும் மற்றும் அசையாத இருவகையான ஆதனங்களையும் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் அத்துடன் அதனை அடகுவைத்தல் அல்லது விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்குக் கொடுத்தல், கைமாற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஆ) இலங்கையினுள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ உள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிடமிருந்து மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் என்பவற்றை ஏற்றுக் கொள்ளுதல் ;

(இ) அதனது பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளுதலும் மற்றும் நிறைவேற்றுதலும் ;

(ஈ) அதனது பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் அத்துடன், அத்தகைய அலுவலர்கள், சேவையாளர்கள் மீது ஒழுக்கக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் அவர்களைப் பதவிவிலக்குதலும் ;

(உ) அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தையும் அத்துடன் அவர்களின் சேவையின் நியதி, நிபந்தனைகளையும் தீர்மானித்தல் ;

(ஊ) அதனால் வழங்கப்படும் சேவைகளுக்கும் வசதிகளுக்கும் எனக் கட்டணங்களை அறவிடுதல் ;

(எ) பிணையுடனோ அல்லது பிணையின்றியோ பணத்தைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல் ;

(ஏ) வங்கிக்கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்துதல் மற்றும் மூடுதல் ;

(ஐ) அதனது பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக பயிற்சிநெறிகளையும் மற்றும் பயிற்சிப்பட்டறைகளையும் நடாத்துதல் ;

(ஒ) அதனது பயன்படுத்தப்படாத பணத்தை நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிணையங்களில் முதலீடு செய்தல் ; அத்துடன்

(ஓ) அதனது பணிகளை சரியானபடி நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உசிதமானதாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

**5.** (1) நிலையத்தின் அலுவல்களின் நிர்வாகமும் முகாமைத்துவமும், அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக்கொண்ட முகாமைச்சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) — முகாமைச்சபை.

(அ) (289 ஆம் அத்தியாயமான) வர்த்தக சம்மேளனக் கட்டளைச்சட்டத்தால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(ஆ) இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(இ) இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனங்களின் கூட்டமைப்பினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(ஈ) 1969 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை தேசிய கைத்தொழில்கள் சம்மேளனச் சட்டத்தால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கைத் தேசிய கைத் தொழில்கள் சம்மேளனத்தால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் ; அத்துடன்

(உ) நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச் சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்.

(2) சபையின் உறுப்பினர் ஒருவர் அதன் சார்பில் அமைச் சருக்கு முகவரியிட்டெழுதும் கடிதத்தின் மூலம் அவருடைய பதவியை எந்நேரத்திலும் துறக்கலாம்.

(3) அமைச்சரானவர், காட்டப்பட்ட காரணங்களுக்காக சபையின் உறுப்பினர் ஒருவரைப் பதவியிலிருந்து விலக்கலாம்.

(4) சபையின் உறுப்பினரொருவர் இறக்குமிடத்து, பதவி துறக்கின்றவிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படு மிடத்து, அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு அவருடைய அல்லது அவளுடைய இடத்தில் இன்னொரு உறுப்பினரை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் அவர் அல்லது அவள் முன்னரே இறந்தால், பதவிநீங்கினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவர் அல்லது அவள் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(5) சபை உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலமானது, (2) ஆம், (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்க மூன்று வருடங்களாக இருத்தல் வேண்டும்.

(6) காலங்கழிவதன் மூலம் பதவியை வறிதாக்குகின்ற சபையின் உறுப்பினரொருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

6. (1) சபையின் உறுப்பினர்கள் அவர்களிடையேயிருந்து சபையின் தவிசாளரைத் தெரிவுசெய்தல் வேண்டும். முகாமைச் சபையின் தவிசாளர்.

(2) சபையின் தவிசாளர் (இவர் இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவார்) அதன் சார்பில் சபைக்கு முகவரியிட்டெழுதும் கடிதத்தின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து பதவிதுறக்கலாம்.

(3) சபையானது, சபையின் மொத்த உறுப்பாண்மையின் அரைவாசியைவிடக் குறையாதவர்களினால் ஆதரிக்கப்படும் தீர்மானமொன்றின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரைப் பதவிநீக்கலாம்.

(4) தவிசாளரின் பதவிக்காலமானது (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய அவர் சபையின் உறுப்பினராகவிருக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்.

7. (1) சபையின் கூட்டம் ஒன்றில் தவிசாளர் சமுகமாயிருந்தால் அவர் அல்லது அவள் அதற்குத் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் கூட்டம் எதிலும் தவிசாளர் சமுகமளித்திராதிருப்பின் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அக்கூட்டத்திற்கான தவிசாளரொருவரை அவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும். சபையின் கூட்டங்கள்.

(2) சபையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் மூன்றாகவிருத்தல் வேண்டும்.

(3) சபையின் கூட்டமொன்றில் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கின்ற ஏதேனும் விடயத்தில் வாக்குகள் சரிசமனாக இருக்கும் பட்சத்தில், அந்தக் கூட்டத்திற்கு தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது உறுப்பினர், அவருடைய அல்லது அவளுடைய வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்க, சபையானது, அதனது கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கை முறையையும், அத்தகைய கூட்டங்களின் அலுவல்கள் நிறைவேற்றப்படுதலையும் ஒழுங்குபடுத்தலாம்.

நிலையத்தின் இலச்சினை.

**8.** (1) நிலையத்தின் இலச்சினையானது, தவிசாளரின் அல்லது தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட நிலையத்தின் எவரேனும் அலுவலரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(2) நிலையத்தின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) நிலையத்தின் இலச்சினையானது, சபையின் அனுமதியுடனும் சபையின் தவிசாளர் அல்லது அதன் சார்பில் சபையால் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் உறுப்பினரொருவரின் முன்னிலையிலும் தவிர, சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது ; அவர் அல்லது அவள் சமூகமளித்திருந்தமைக்கு அடையாளமாக சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் II

### நிதி

நிலையத்தின் நிதியம்.

**9.** (1) நிலையமானது அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிலையத்தில் நிதியத்திற்கு —

(அ) நிலையத்தின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினால், காலத்துக்குக்காலம் ஒதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இச்சட்டத்தின் கீழ், அதனது தத்துவங்கள், பணிகள், கடமைகள் ஆகியவற்றைப் பிரயோகிக்கையில், புரிகையில், நிறைவேற்றுகையில் நிலையத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் என்ற வகையில் நிலையத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) நிலையத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கையில், புரிகையில், நிறைவேற்றுகையில் சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

10. (1) சபையானது, நிலையத்தின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய சரியான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். கணக்குகளின் கணக்காய்வு.

(2) நிலையத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதில் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை ஏற்புடையதாதல் வேண்டும்.

11. பஞ்சாங்க ஆண்டே நிலையத்தின் நிதியாண்டாதல் வேண்டும். நிலையத்தின் நிதியாண்டு.

## பாகம் III

### பொது

12. (1) சபையானது, இந்தச் சட்டத்தின் கோட்பாடுகளுக்கும், ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக விதிகளை ஆக்கலாம். விதிகள்

(2) முதலாம் உட்பிரிவினால் அதற்குக் கொடுக்கப்பட்ட பொதுவான தத்துவங்களுக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் எல்லா அல்லது ஏதேனும் விடயங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம் :—

(அ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கத்தின் மூலம் வர்த்தகப் பிணக்குகளின் தீர்மானத்திற்காக நிலையத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பங்கள் எந்தப் படிவத்திலும் முறையிலும் செய்யப்படுதல் வேண்டுமோ அந்தப் படிவமும் முறையும் ;

(ஆ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கத்தின் மூலம் வர்த்தகப் பிணக்குகளைத் தீர்மானிப்பதில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை ;

(இ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கத்தின் மூலம் வர்த்தகப் பிணக்குகளின் தீர்மானத்திற்காக நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்களுக்கான நடத்தைக்கோவை ;

(ஈ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கத்தின் மூலம் வர்த்தகப் பிணக்குகளைத் தீர்மானிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள்.

(3) இப்பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட எந்த விதியும் அது அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, அத்தகைய அங்கீகாரம்பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படும்வரையில் பயனுறுதலாகாது.

வழக்கு நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு.

13. (1) சபையின் உறுப்பினரொருவர் அல்லது நிலையத்தின் அலுவலர் அல்லது சேவையாளரொருவருக்கு எதிராக, இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்புரையின் மீது அத்தகைய உறுப்பினரால், அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதான ஏதேனும் செயலுக்காக துடர்ச்சி அல்லது குற்றவழக்கு நடவடிக்கை எதுவும் தொடரப்படலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் நிலையத்திற்கு எதிராக அல்லது நிலையத்தினால் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு நடவடிக்கையில், நிலையத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினம் நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும், அத்துடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கு நடவடிக்கையில் நிலையத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது நிலையத்தினால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுகள் நிலையத்தின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது அவ்வாளினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அவ்வாளுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கு நடவடிக்கையில், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவினங்கள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என்று நீதிமன்றம் கருதினால் அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது வழக்கு நடவடிக்கையில் அவ்வாளினால் அறவிடப்பட்டால் ஒழிய, நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கங்களுக்காக சபையின் உறுப்பினர்களும் நிலையத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

14. சபையின் எல்லா உறுப்பினர்களும், நிலையத்தின் அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தியவொரு நிறுவனமாக நிலையமானது கருதப்படுதல்.**

**15.** நிலையமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட்ட அட்டவணைப்படுத்திய நிறுவனமொன்றாகக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அச்சட்டத்தின் ஏற்பாடுகள் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

**காலவிதிப்பு.**

**16.** (1) ஏதேனும் வழக்குக்கான காரணம் தொடர்பில் கால விதிப்புக்காலத்தைக் கணிப்பிடுகையில் வேறு ஏதேனும் சட் டத்தில் ஏதேனும் முரணாக உள்ளது எது, எவ்வாறிருப்பினும் —

(அ) மத்தியஸ்தும் மற்றும் இணக்கத்தின் மூலம் அவ்வழக் குக்கான காரணத்தை ஏற்படுத்தும் வர்த்தகப் பிணக்குகளைத் தீர்மானம் செய்வதற்காக நிலையத் திற்கு எத்திகதியில் விண்ணப்பம் செய்யப்பட்டதோ அத்திகதி தொடக்கம் ; அத்துடன்

(ஆ) திறத்தவர்களுக்கிடையில் உடன்படிக்கை ஒன்று நிறைவேற்றப்படுதல் மூலம் அல்லாத வேறுவகை யில், அந்த வர்த்தகப் பிணக்குகளின் மத்தியஸ்தத் திற்கான நடவடிக்கைகள் எத்திகதியில் முடிவுறுத்தப் படுகின்றதோ அத்திகதியில் முடிவடைகின்ற,

காலப்பகுதியைக் கருத்திற்கொள்ளாதுவிடுதல் வேண்டும்.

(2) ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஒரு வழக்குத் துடர்ச்சியில், வழக்குக்கான காரணம் காலவிதிப்பைக் கடந்து விட்டதாவென்ற கேள்வி எழுகின்றவிடத்து,—

(அ) மத்தியஸ்தும் மற்றும் இணக்கத்தின் மூலம் அவ்வழக் குக்கான காரணத்தை ஏற்படுத்தும் வர்த்தகப் பிணக்குகளை தீர்வுசெய்வதற்காக நிலையத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்ட திகதி ; அத்துடன்

(ஆ) திறத்தவர்களுக்கிடையே உடன்படிக்கையொன்று நிறைவேற்றப்படுவதன் மூலம் அல்லாத வேறுவகை யில் மத்தியஸ்தும் மூலமாக வர்த்தகப் பிணக்குகளைத் தீர்வுசெய்வதற்கான நடவடிக்கைகள் முடிவுறுத் [illegible] திகதி

ஆகியவற்றை முறையே குறித்துரைத்து சபையின் தவிசாளரால் ஒப்பமிடப்பட்ட சான்றிதழொன்று, கையொப்பத்தை எண்பிக்காமலே சான்றாக ஏல்தகவுடையதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அதில் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கான சான்றாக இருத்தலும் வேண்டும்.

ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**17.** இந்தச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.